**SPLCC.No.19/2025**

**PW 17 : திரு.ரஜினிகாந்த்**

நாள் : 29.01.2026.

**இந்நீதிமன்ற CRLMP.1674/2025, dated 22.01.2026 மனு அனுமதிக்கப்பட்டு, சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

3 முதல் 5 எதிரிகள் ஆஜர். 2, 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணையின் தொடர்ச்சி –**

எனது விசாரணையின் போது, கீழ்கண்ட ஆவணங்களை வாலாஜா, Agricultural Engineering Departmentன் அலுவலகத்தில் இருந்து பெற்றேன். அவ்வாறு நான் பெற்ற ஆவணங்கள் –

1. வாலாஜா அக்ரோ சர்வீஸ் செண்டர் பில் எண்.799, நாள் 27.01.2008, தொகை ரூ.42,000/– **அ.சா.ஆ.102** ஆகும்.

2. ஷர்மிளா ஸ்டோர்ஸ், பில் எண்.3689, நாள்.28.12.2007, தொகை ரூ.228/– **அ.சா.ஆ.103** ஆகும்.

3. திருமகள் அச்சகம் ரொக்க இரசீது தேதி 25.06.2007, தொகை ரூ.24,000/– **அ.சா.ஆ.104** ஆகும்.

4. பழனி டிஜிட்டல் ஸ்டுடியோ அன்ட் வீடியோ கவரெஜ் தேதி 14.03.2008, தொகை ரூ.35,000/– **அ.சா.ஆ.105** ஆகும்.

5. நித்யா ஆப்செட் தேதி 16.11.2007, தொகை ரூ.58,000/– **அ.சா.ஆ.106** ஆகும்.

6. நித்யா ஆப்செட் தேதி 14.06.2006, தொகை ரூ.30,000/– **அ.சா.ஆ.107** ஆகும்.

7. தடய அறிவியல் துறையின் அறிக்கை எண்.322/2012, நாள் 29.01.2013 **அ.சா.ஆ.108** ஆகும். அ.சா.ஆ.102 முதல் அ.சா.ஆ.108

வரையான ஆவணங்களுக்கு இந்த சாட்சி சம்மந்தப்பட்டவர் அல்ல என்பதால், மேற்படி ஆவணங்களை அ.சா.17 மூலம் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. மேற்படி எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்கு (Subject to Proof and Relevancy) உட்பட்டு, குறியீடு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் –**

மேற்படி அ.சா.ஆ.102 முதல் 108 வரையையான ஆவணங்களில் நான் எந்த கையொப்பமும் போடவில்லை என்றால், சரிதான். மேற்படி ஆவணங்களில் கையெழுத்து போட்ட நபர்களுக்குதான் அந்த ஆவணங்களின் உண்மைத்தன்மை தெரியும் என்றால், சம்மந்தப்பட்ட நபர்களுக்கு தெரியும், மேலும் கையெழுத்து பரிசோதனை செய்த நிபுணருக்கும் தெரியும். மேற்படி ஆவணங்களின் உண்மைதன்மை எனக்கு தெரியாது என்றால், மேற்படி ஆவணங்களின் உண்மைதன்மை எனக்கு ஓரளவிற்கு தெரியும். எனக்கு ஓரளவிற்கு தெரியும் என்று நான் சொல்வது முற்றிலும் பொய்யானது என்றால், அது சரியல்ல. கையெழுத்து பரிசோதனை செய்த நிபுணர் ஏன் அந்த முடிவுக்கு வந்தார் என்று என்னால் சொல்ல முடியாது என்றால், அது சரிதான். நான் வேளாண்மை பொறியியல் துறையில் மேற்படி ஆவணங்களை பெற்றேன் என்று முதல் விசாரணையின் சொல்வது குற்றவியல் நடைமுறைச் சட்ட விதிகளுக்கு உட்பட்டது அல்ல என்றால், அது சரியல்ல. மேற்படி ஆவணங்களை கைப்பற்றும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை நான் பின்பற்றாததால் அ.சா.ஆ.102 முதல் அ.சா.ஆ.108வரையான ஆவணங்கள் செல்லாது என்றால், அது சரியல்ல. மேற்படி ஆவணங்கள் எதிரிகளை

**கட்டுப்படுத்தாது என்றாலும், அந்த ஆவணங்கள் எங்களால் தயாரிக்கப்பட்டது என்றாலும், அது சரியல்ல.**

**மறு விசாரணை –**

**இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet